# TAMIL NADU HIGHWAY ENGINEERS NEWS

Price Rs. 10/- (Tamil & English Monthly Magazine) தனிப் பிரதி ரூ. 10/-

| ஆண்டு 36 | மே 2026 | இதழ் 5 |
|---|---|---|
| Volume 36 | MAY 2026 | Issue 5 |





10.05.2026 அன்று தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்ட **மாண்புமிகு திரு.ச.ஜோசப் விஜய்** அவர்களை தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்த்தி வரவேற்கிறது


**தலைவர்**
பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ.,

**பொதுச் செயலாளர்**
பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ.எம்.பி.எ.,

**பொருளாளர்**
பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ.,

**துணைத்தலைவர்கள்**
பொறிஞர் **சோ.பாண்டியன்,** எம்.இ. எம்.பி.எ.,
பொறிஞர் **அ.கிருஷ்ணன்,** எம்.டெக்.,

**செயலாளர்கள்**
பொறிஞர் **ச.ஜோதிபாசு,** எம்.டெக்., எம்.பி.ஏ.,
பொறிஞர் **ஜி.விஜயராகவன்,** எம்.டெக்.

**செயற்குழு உறுப்பினர்கள்**
1. பொறிஞர் **ப.அசோக்குமார்,** எம்.டெக்., 2. பொறிஞர் **ச.கண்ணன்,** எம்.இ., 3. பொறிஞர் **ந.கோட்டை ராவுத்தர்,** எம்.டெக்., 4. முனைவர் **இரா.செந்தில்ராஜ்,** எம்.இ., 5. பொறிஞர் **சி.நடராஜன்,** எம்.டெக்., 6. பொறிஞர் **ஜ.பிரபு,** எம்.இ., 7. பொறிஞர் **ஜெ.பிரேம் ஆனந்த்,** எம். டெக்., 8. பொறிஞர் **ப.பூபாலன்,** பி.இ., 9. பொறிஞர் **சி.சு.முத்துகிருஷ்ணன்,** எம்.இ., 10. பொறிஞர் **ரா.முத்து முருகன்,** பி.இ., 11. பொறிஞர் **கோ.முத்து முனிகுமாரி,** எம்.டெக்., எம்.பி.எ., 12. பொறிஞர் **ந.முருகானந்தம்,** எம்.டெக்., 13. பொறிஞர் **க.மோகன்ராஜ்,** எம்.டெக்., 14. பொறிஞர் **ர.ராஜா,** எம்.இ., 15. பொறிஞர் **பா.விமல்ராஜ்,** எம்.டெக்., 16. பொறிஞர் **தி.விவேகானந்தன்,** எம்.இ., 17. பொறிஞர் **நெ.ஜாஹிர் உசேன்,** எம்.இ., 18. பொறிஞர் **க.ஸ்ரீராம்,** எம்.டெக்.,



**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்**

35v, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015

தொ. பே. எண் : 044 - 2230 0190, தொ. அ. எண். 044 - 2230 0190

website : www.tnhighwaysengineers.com, e-mail : atnhe.chn15@gmail.com




பொறிஞர் ட்டி.ஆர்.தங்கராஜி, உதவிப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருச்சி அவர்கள் 17.03.2026 அன்று திருச்சியில் இயற்கை எய்தினார். அவர்களின் குடும்பத்திற்கு தஞ்சாவூர் மண்டலத்தின் சார்பாக **பொறிஞர் எஸ்.பாலசுப்பிரமணியன், கண்காணிப்புப் பொறியாளர், க(ம)ப, தஞ்சாவூர்** அவர்கள் நிதியினை சங்க நிருவாகிகளிடம் வழங்கினார்.




பொறிஞர் ட்டி.ஆர்.தங்கராஜி, உதவிப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருச்சி அவர்கள் 17.03.2026 அன்று திருச்சியில் இயற்கை எய்தினார். அவர்களின் குடும்பத்திற்கு அரியலூர் கோட்டத்தின் சார்பாக **பொறிஞர் பி.வடிவேலு, கோட்டப் பொறியாளர், க(ம)ப, அரியலூர்** அவர்கள் நிதியினை சங்க நிருவாகிகளிடம் வழங்கினார்.

# தலையங்கம்

தமிழ்நாடு அரசின் முதலமைச்சராகப் பதவியேற்றுள்ள **மாண்புமிகு திரு.ச.ஜோசப் விஜய்** அவர்களுக்கும் **மாண்புமிகு பொதுப்பணிகள் (கட்டடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்), விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. ஆதவ் அர்ஜுனா** அவர்களுக்கும் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் புதிய அரசு எடுக்கும் முடிவுகளைத் தமிழ்நாட்டில் செயல்படுத்தியும் சாலை உட்கட்டமைப்பு வசதிகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்தியும் பொருளாதார வளர்ச்சியை வேகப்படுத்த உறுதிகொண்டுள்ளோம். தமிழ்நாட்டின் கடைக்கோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் அனைத்து ஒத்துழைப்புகளையும் அரசுக்கு வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்திய அளவில் மாநில உள்நாட்டு மொத்த உற்பத்தி GSDP அடிப்படையில் தற்சமயம் இரண்டாவது மாநிலமாக உள்ள தமிழகத்தை விரைவில் முதன்மை மாநிலமாக மாற்ற தமிழகத்தில் மாண்புமிகு இளம் முதல்வர் தலைமையிலான அரசு எடுக்கும் முடிவுகளுக்குத் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் சிறப்பான ஒத்துழைப்பை நல்கிடும்.

கடந்த காலங்களில் நிறைவேற்றப்படாத நமது முக்கிய கோரிக்கைகளைச் சங்கத்தின் சார்பாக தயார் செய்து செய்தி வெளியிடாக வெளியிடப்பட்டுள்ளது (அதன் நகல் பிறிதொரு பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது). தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் நிருவாகிகள் கூட்டம் 15.05.2026 அன்று ஹோட்டல் ஆம்பர் நுங்கம்பாக்கத்தில் நடைபெற்றது. நமது முக்கிய கோரிக்கையான ஊதியம் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்கள் செய்தி வெளியிடாக வெளியிடப்பட்டுள்ளது (அதன் நகல் பிறிதொரு பக்கத்தில் அச்சிடப்பட்டுள்ளது).

நெடுஞ்சாலைத்துறையில் 2026-27 ஆம் ஆண்டுக்கான உதவிக் கோட்டப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை பதவி உயர்வுக்கான காலிப் பணியிடங்களின் மதிப்பீட்டினை தயார் செய்து அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றுப் பதவி உயர்வு வழங்கவும் சில பொறியாளர்கள் ஓய்வு பெறும் நிலையில் உள்ளதால், அவர்கள் ஓய்வு பெறுமுன் பதவி உயர்வு அளிக்க ஏதுவாக கருத்துருக்களை அரசுக்கு விரைவாக அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளவும் முதன்மை இயக்குநர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம்.

**நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்க!      பொறியாளர் ஒற்றுமை ஓங்குக!!**

## நகல்:


# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் சே.இராமநாதன், பி.இ., கைபேசி எண்: 88708 88918 | பொறிஞர் ப.வீரமணி, எம்.இ., எம்.பி.ஏ., கைபேசி எண்: 97517 04393 | பொறிஞர் சொ.தியாகராஜா, எம்.இ., கைபேசி எண்: 98436 40475 |


நாள் 14.05.2026

செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசின் முதல்வராக பதவி ஏற்றுள்ள மாண்புமிகு திரு.ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் தங்களது தலைமையிலான ஆட்சி எடுக்கும் முடிவுகளைத் தமிழ்நாட்டில் செயல்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை சாலை உட்கட்டமைப்பு வசதிகளை உலகத் தரத்திற்கு மேம்படுத்திப் பராமரித்துத் வேகபடுத்த உறுதி கொண்டுள்ளோம். தமிழ்நாட்டின் கடைக் கோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்துவதில் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம் அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கும் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

<u>கடந்த ஆட்சிக் காலத்தில் பட்டதாரிப் பொறியாளர்களின் நிறைவேற்றப்படாத கோரிக்கைகள்:</u>

1. நெடுஞ்சாலைத்துறையில் 2026-27 ஆம் ஆண்டுக்கான உதவிக் கோட்டப் பொறியாளர் முதல் தலைமைப் பொறியாளர் வரை பதவி உயர்வுக்கான மதிப்பீட்டினை தயார் செய்து அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற்றுப் பதவி உயர்வு பெற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். மேலும் சில பொறியாளர்கள் ஓய்வு பெறும் நிலையில் உள்ளதால், அவர்கள் ஓய்வு பெறுமுன் பதவி உயர்வு அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2. நெடுஞ்சாலைத்துறையில் மூன்று ஆண்டுகளுக்குமேல் ஒரே இடத்தில் பணிபுரியும் பொறியாளர்களுக்கு 31.05.2026-க்குள் பொது மாறுதல் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதன் மூலம், எங்கள் உறுப்பினர்கள் தங்கள் குழந்தைகளின் பள்ளிச் சேர்க்கைக்கு இடங்களைத் தேடுவதில் எவ்விதச் சிரமமும் இன்றி, புதிய இடங்களில் எளிதாகக் குடியேற இயலும். குறிப்பாக, பெண் பொறியாளர்கள் தங்கள் வசிப்பிடங்களை மாற்றிக்கொள்ள வேண்டிய சூழல் ஏற்பட்டால், அவர்கள் மிகுந்த இன்னல்களுக்கு ஆளாக நேரிடும். எனவே, 2026-27 ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல்களை, அதற்கென நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள், ஒரு வெளிப்படையான மற்றும் கலந்தாய்வு அடிப்படையிலான செயல்முறையின் வாயிலாகச் செயல்படுத்தத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குமாறு தமிழக அரசை சங்கம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

3. நெடுஞ்சாலைத்துறையின் மறுசீரமைப்பு அரசாணையினை 15.06.2026 அன்று அனைத்து அலுவலகங்களும் எந்தத் தடையுமின்றி (Seamless) மறு பணியமர்வு செய்யப்பட்ட இடங்களில் செயல்படும் வகையில் முன்னேற்பாடுகள் செய்து அரசாணையில் நடைமுறைக்குக் கொண்டு வருவதை உறுதி செய்யவும் இதன் காரணமாக துறை

மறுசீரமைப்பு 01.06.2026 அன்று நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

4. 1990ஆம் ஆண்டு பொதுப்பணித்துறையும் நெடுஞ்சாலைத்துறையும் ஒரே அமைச்சரின் கீழ் இயங்கி வந்த நிலையில் தலைமைச் செயலகத்தில் சிறப்புச் செயலாளர் (Special Secretary) பதவி தோற்றுவிக்கப்பட்டு தொழில்நுட்பம் தொடர்பான கருத்துருக்களைப் பரிசீலித்து அரசுக்கு ஆலோசனை வழங்கிட தலைமைப் பொறியாளர் ஒருவர் அப்பதவியில் நியமிக்கப்பட்டார். தற்பொழுது அந்த பதவிக்காக கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அதனை மாற்றி பொதுப்பணித்துறை உள்ளதுபோன்று தலைமைப் பொறியாளர் நிலையில் தோற்றுவிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

5. பட்டதாரிப் பொறியாளர்களுக்கு ஆறாவது ஊதியக்குழுவின் திரு.ராஜீவ் ரஞ்சன் தலைமையிலான ஒருநபர் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியத்தின் பரிந்துரைகளை கீழ்க்கண்டவாறு அமல்படுத்திட வேண்டுகிறோம்.

| | |
|---|---|
| **உதவிப் பொறியாளர்** | **ரூ.15600 - 39100 +தர ஊதியம் ரூ.5400** |
| **உதவிக் கோட்டப் பொறியாளர்** | **ரூ.15600 - 39100 +தர ஊதியம் ரூ.6600** |
| **கோட்டப் பொறியாளர்** | **ரூ.15600 - 39100 +தர ஊதியம் ரூ.7600** |

6. ஊதிய முரண்பாடுகளை களையும் வரை 04.04.2024-ல் **சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்** அடிப்படையில் குறிப்பாணையை நிதித்துறை வெளியிடாததால் பதவி உயர்வின் போதும், பணி ஓய்வின் போதும் பணப்பலன்கள் பெற முடியாமலும், ஊதியம் பெற இயலாமலும் கருவூலத்துறை மூலம் பொறியாளர்கள் மிகுந்த மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். பொறியாளர்கள் மீதான இந்த தொழில்முறை தீண்டாமைக்கு உரிய நடவடிக்கை எடுத்திடவும் கேட்டுக் கொள்கிறோம்.

7. பொறியாளர்களுக்கு மட்டும் 2017 முதல் மறுக்கப்பட்டு வரும் 7ஆவது ஊதியக்குழுவின் ஊதியப்பயன்களை ஒரு நபர் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஊதியத்தின் அடிப்படையில் உடனே அமல்படுத்திட வேண்டுகிறோம்.

8. அரசு துறையில் பணிபுரியும் பெரும்பாலான பொறியாளர்கள் பதவி உயர்வு பெரும் வாய்ப்பின்றி கீழ்நிலை பதவிகளிலேயே ஓய்வு பெறும் நிலை உள்ளதால், அரசு மருத்துவர்கள் மற்றும் கால்நடை மருத்துவர்களுக்கு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது போல **பட்டதாரிப் பொறியாளர்களுக்கும் காலமுறை பதவி உயர்வு** அமல்படுத்திடுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

9. உள்கட்டமைப்புகளைப் பெருக்கி மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்க நிறுவப்பட்டதுறை, பொறியியல் துறை. பொறியியல் துறைகளை துடிப்புமிக்க துறைகளாக வளர்ப்பதற்கும் பணிபுரியும் பணியாளர்களின் குறைகளைக் களைவதற்கும் **"பொறியியல் சீராய்வுக் குழு" (Engineering Reforms Commission)** ஒன்றை அமைத்திடுமாறு தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

10. தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவிப் பொறியாளர் முன்பு எழுத்து மற்றும் நேர்முகத் தேர்வு மூலமாக பணி நியமனம் செய்யப்பட்டது. ஆனால், தற்பொழுது ஊதியக் குறைப்பின் காரணமாக நேர்முக தேர்வுத் இல்லாமல் எழுத்துத் தேர்வு மூலம் மட்டுமே தேர்வு செய்யப்படுவதால் தரமான பொறியாளர்கள் விரும்பிப் பணிக்கு வர இயலாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு சிறப்பான தனித்துவமிக்க கல்லூரிகளில் பயின்று சிறப்பு வாய்ந்த பொறியாளர்கள் முதன்மை துறையாக நெடுஞ்சாலைத்துறையைத் தேர்வு செய்து சிறந்த பொறியியல் வல்லுநர்களாகப் பணியாற்றி வருகின்றார்கள். இது தொடர மருத்துவர்களுக்கு இணையாக ஊதியத்தினை வழங்கி உதவிட வேண்டுகிறோம்.

11. நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்களை ஓய்வு பெற்றுள்ள நிலையிலும் மற்றும் ஓய்வு பெறும் நிலையில் உதவிக் கோட்டப் பொறியாளர் பதவியில் தேர்வு நிலைக்கான தகுதி காலத்தை (10 ஆண்டுகள்) நிறைவு செய்தும் அதற்கான ஊக்க ஊதிய உயர்வு வழங்காமல் உள்ளது. இதனால் பொறியாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கபட்டுள்ளது. இதற்கு தேர்வு நிலைக்கான ஆணையினை விரைவில் வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறோம்.

12. பொறியாளர் சிலருக்கு Ph.D மற்றும் PG increments வழங்குவதற்கான கோப்புகள் நிலுவையில் உள்ளன. இந்தக் காலதாமதம் குறிப்பிட்ட பொறியாளர்களுக்கு மனஉளைச்சலை ஏற்படுத்துகிறது. எனவே, நிலுவையில் உள்ள கோப்புகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து ஊதிய உயர்வுகளை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

13. 2010ஆம் ஆண்டு முதன்மை இயக்குநர் பதவியினை உருவாக்கி துறையின் பொது நிர்வாகப் பணிகளைக் கவனித்திட ஆணை வழங்கப்பட்டது. முதன்மை இயக்குநருக்கு இணையான பதவி பிற மாநிலங்களிலும் தமிழ்நாடு பொதுப்பணித் துறையிலும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் (Engineer in Chief) என்று அழைக்கப்படுவதால் இங்கு நடைபெறும் கூட்டங்களிலும் பிற மாநிலங்களில் நடைபெறும் கருத்தரங்கங்களிலும் இரண்டு பதவிகளும் வேறுபடுத்திப் பார்க்கப்படுகின்றன. இந்த நிலையைத் தவிர்த்திடும் பொருட்டு முதன்மை இயக்குநர் பதவிப் பெயரினை முதன்மைத் தலைமைப் பொறியாளர் என்று பெயர் மாற்றம் செய்து ஆணை வழங்க தமிழக அரசை கேட்டுக் கொள்கிறோம்.

14. தமிழ்நாடு அரசு புதிதாக தோற்றுவித்துள்ள தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலைகள் ஆணையத்தில் நெடுஞ்சாலைத்துறையில் பணிபுரியும் பொறியாளர்களையே அயற்பணியில் பணியமர்த்தி அதன் மூலம் தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறையில் பதவி உயர்வுகளுக்கான வாய்ப்புகள் ஏற்படுவதற்கு வழிவகை செய்திட தமிழக அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

பொருளாளர்

பொதுச் செயலாளர்

3

E-mail: gsaoe.pwd@gmail.com Tel : 044-28515445 / 29510445

# TAMIL NADU ENGINEERS' FEDERATION (TNEF)

(A Common Forum of Graduate Engineers of all the Government Department, Board and Corporations of Tamil Nadu)
"Affiliated with Indian Engineers Federation (INDEF), Newdelhi - Regd. No. S-E/1687/Dist South East / 2019 dated 20.11.2019"
Tamilnadu PWD & WRD Compound, Chepauk, Chennai-600005

President
Er.P.Veeramani (TN Highways)
Cell : 9751704393

General Secretary
Er.M.Dhanasekaran (AOE, TNPWD & TNWRD)
Cell : 9159590071

Treasurer
Er.K.Periakaruppan (TNPWD)
Cell : 8220075570

Vice Presidents
Er.E.Emmanuel Jaikar
(TN Public Works Department)
Cell : 9444736158

Er.V.Shanmuga
(TN Electricity Board)
Cell : 9442396962

Secretaries:
Er.S.Prakash
(TN Rural Development Department)
Cell : 9488666555

Er.S.A.Selvakumar
(TN State Transport Corporation)
Cell : 9489203800

Er.R.Dhanasekar
(Greater Chennai Corporation)
Cell : 9444150966

Er.P.T.V.Suresh Kumar
(Chennai Metro Water)
Cell : 9962511899

Internal Auditor:
Er.C.N.Periasamy
(TN Housing Board)
Cell : 9841195371

## பத்திரிக்கைச் செய்தி

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு என்பது நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, ஊரகவளர்ச்சித்துறை, போக்குவரத்துக் கழகங்கள், வேளாண்மை பொறியியல் துறை, மின்சார வாரியம், வீட்டுவசதி வாரியம், நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம், குடிநீர் வடிகால் வாரியம் உள்ளிட்ட தமிழக அரசின் பொறியியல் சார்ந்த துறைகள் கழகங்கள் மற்றும் வாரியங்களில் பணிபுரியும் பட்டதாரிப் பொறியாளர்களுக்கான 15-க்கும் மேற்பட்ட பொறியாளர் சங்கங்களின் 10,000க்கும் மேற்பட்ட பொறியாளர்களை உறுப்பினர்களாக கொண்ட ஒருங்கிணைந்த அமைப்பாகும். இது மத்திய அரசில் பதிவு பெற்ற இந்திய பொறியாளர் கூட்டமைப்பில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அங்கமாகவும் தமிழகத்தில் செயல்பட்டுவருகிறது.

**15.05.2026 மதிய இடைவேளையில் நடத்தப்பட்ட இக்கூட்டமைப்பின் நிர்வாகிகள் கூட்டத்தில்:**

"தமிழக அரசுத்துறை, கழகம், வாரியங்களில் பணியாற்றும் 10,000க்கும் மேற்பட்ட பட்டதாரிப் பொறியாளர்களின் கூட்டமைப்பு சார்பில் **தமிழகத்தின் ஆட்சி** பொறுப்பேற்றுள்ள தமிழக வெற்றிக் கழகத்திற்கு வாழ்த்துகளும், கட்சி தொடங்கி ஆட்சி அமைத்தது வரை அனைத்திலும் புதிய சாதனைகளை படைத்து தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள **மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.ச.ஜோசப்விஜய்** அவர்களுக்கு பாராட்டுக்களும் தெரிவித்துக்கொள்ளப்பட்டது".

இந்திய அளவில் **GSDP என்ற மாநில உள்நாட்டு மொத்த உற்பத்தி அடிப்படையில் தற்சமயம் இரண்டாவது மாநிலமாக** உள்ள தமிழகத்தை **விரைவில்** முதன்மை மாநிலமாக மாற்ற தமிழகத்தில் **மாண்புமிகு இளம் முதல்வர் தலைமையிலான தூய** அரசு எடுக்கும் முடிவுகளுக்கு பொறியாளர் கூட்டமைப்பைச் சார்ந்த பொறியாளர் சங்கங்கள் அனைத்தும் சிறப்பான ஒத்துழைப்பை நல்கிடுமென்றும், அரசின் அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும், மக்கள் நலத்திட்டங்களையும் தமிழகத்தின் கடைக்கோடி கிராம மக்களும் பயன்பெறும் வகையில் செயல்படுத்துவதில் தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பு அனைத்து வகையிலும் துணை நிற்குமென்றும் நிர்வாகிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

**பொறியாளர்கள் ஊதிய முரண்பாடு குறித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு பின்வருவனவற்றை எடுத்துரைக்க ஆலோசிக்கப்பட்டது:-**

கூட்டமைப்பின் சார்பில் பொறியாளர்களின் ஊதிய விகித நிர்ணயத்தலில் 2009 முதல் உள்ள முரண்பாடுகளை களையவும், 2017 முதல் பொறியாளர்களுக்கு மட்டும் மறுக்கப்பட்டு வருகின்ற 7-வது ஊதியகுழு பலன்களை வழங்கிட வலியுறுத்தியும் தொடர்ந்து போராட்டங்கள் நடத்துப்பட்டுவந்தன, குறிப்பாக 18.02.2026 **அன்று மாநில தழுவிய பேரணி மற்றும் ஆர்ப்பாட்டம்** நடத்தப்பட்டது.

E-mail: gsaoe.pwd@gmail.com

Tel : 044-28515445 / 29510445

# TAMIL NADU ENGINEERS' FEDERATION (TNEF)

(A Common Forum of Graduate Engineers of all the Government Department, Board and Corporations of Tamil Nadu)

"Affiliated with Indian Engineers Federation (INDEF), Newdelhi - Regd. No. S-E/1687/Dist South East / 2019 dated 20.11.2019"

Tamilnadu PWD & WRD Compound, Chepauk, Chennai-600005

**President**
Er.P.Veeramani (TN Highways)
Cell : 9751704393

**General Secretary**
Er.M.Dhanasekaran (AOE, TNPWD & TNWRD)
Cell : 9159590071

**Treasurer**
Er.K.Periakaruppan (TNPWD)
Cell : 8220075570

**Vice Presidents**

Er.E.Emmanuel Jaikar
(TN Public Works Department)
Cell : 9444736158

Er.V.Shanmuga
(TN Electricity Board)
Cell : 9442396962

**Secretaries:**

Er.S.Prakash
(TN Rural Development Department)
Cell : 9488666555

Er.S.A.Selvakumar
(TN State Transport Corporation)
Cell : 9489203800

Er.R.Dhanasekar
(Greater Chennai Corporation)
Cell : 9444150966

Er.P.T.V.Suresh Kumar
(Chennai Metro Water)
Cell : 9962511899

**Internal Auditor:**

Er.C.N.Periasamy
(TN Housing Board)
Cell : 9841195371

கடந்த ஆட்சியின் விடியல் ஏற்பட்டு பொறியாளர்கள் வாழ்வு மலரும் என்று எண்ணிய வேளையில் நிதிச்சுமை என்று தவறான வழிகாட்டுதலால் பொறியாளர்களின் வாழ்வின் இருள் விலகவேயில்லை, இதனால் பொறியாளர்கள் மேற்கொண்ட நீதிமன்ற போராட்டங்களால் மிகுந்த சலிப்பும், மனவேதனையும் அடைந்துள்ளனர். தீர்வை நோக்கிய முன்னெடுப்புகளை பொறியாளர் சங்கங்கள் முன்மொழிந்த போதும் கடந்த ஆட்சியில் நிதித்துறையினரால் பொறியாளர்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளனர்.

இந்நிலையில் தமிழக அரசில் புதிய வரலாற்று சாதனை படைத்து தமிழக வெற்றி கழகம் சார்பில் முதல்வராக பதவியேற்றுள்ள தமிழக முதல்வர் மாண்புமிகு திரு.ச.ஜோசப் விஜய் அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பணி சிறக்க பாராட்டுகளையும் தெரிவித்துகொள்வதோடு பொறியாளர்கள் ஊதியம் தொடர்பான நீண்ட போராட்டம் முடிவுக்கு வர தூய ஆட்சியில் முதல்வர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மேலும், ஊதிய முரன்பாடு குறித்தும், அதற்குரிய பொறியாளர்கள் கூட்டமைப்பு முன்மொழியும் தீர்வை குறித்தும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைச் சந்தித்து எடுத்துரைக்க பொறியாளர் கூட்டமைப்பின் நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

**பொறி.மு.தனசேகரன்,**
பொதுச் செயலாளர், த.நா.பொ.கூட்டமைப்பு

**பொறி.ப.வீரமணி**
தலைவர், த.நா.பொ.கூட்டமைப்பு

**Copy of :**

# Association of Tamil Nadu Highway Engineers

**Recognised in G.O Ms. No. 1814 Public (Services) Dept., Dated 21.05.1956**
**'Highway Engineers Home', 35v, Taluk Office Road, Saidapet, Chennai - 600 015**
Phone : 044 - 2230 0190 / 4312 3792, Email : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
www.tnhighwaysengineers.com

| President | General Secretary | Treasurer |
|---|---|---|
| **Er.S.RAMANATHAN,** B.E., | **Er.P.VEERAMANI,** M.E., M.B.A., | **Er.S.THIYAGARAJA,** M.E., |
| Mobile No.: 88708 88918 | Mobile No.: 97517 04393 | Mobile No.: 98436 40475 |

**Letter No.431/ATNHE/2026** **dated 29.04.2026**

**To**

1. **The Chief Secretary,**
   **Government of Tamil Nadu,**
   **Secretariat,**
   **Chennai – 9**

2. **The Principal Secretary to Government,**
   **Human Resources Management Department,**
   **Secretariat,**
   **Chennai – 9**

3. **The Secretary to Government,**
   **Highways and Minor Ports Department,**
   **Secretariat,**
   **Chennai – 9**

4. **The Director General,**
   **Highways Department,**
   **Guindy,**
   **Chennai - 25**

**Sir,**

**Sub : Highways Department – All Cadres of Engineers - General Transfer for the year of 2025 - 26 – requested**

**Ref : 1. G.O.Ms.No.10, Personnel and Administrative Reforms (Per-S), Department, dated 07.01.1994**
**2. Letter No.23847/S/98-1, Personnel and Administrative Reforms (Per-S), Department, dated 05.08.1998**

We wish to submit that about 1,600 engineers are presently working across the ten wings of the Highways Department. Normally, general

transfers among Assistant Engineers, Assistant Divisional Engineers, Divisional Engineers, Superintending Engineers, and Chief Engineers were effected during the months of April and May every year.

Since 2017, general transfers have not been carried out for the past eight years. As a result, many engineers have been working in the same station for more than ten years against the objective of the transfer policy of the Government.

Even, when engineers apply for transfers to vacant posts on personal grounds, they face procedural difficulties in getting favourable orders, which causes considerable mental stress.

We wish to reiterate that the general transfer be implemented before 31.05.2026, as so that our members can settle in the new places without difficulty in finding seats in schools for their wards. In particular, women engineers will face hardship if they are required to relocate their residences.

In view of the above, we respectfully request that the instructions may be issued to carry out the general transfer for the year 2025–26 within the period remarked for the General Transfer through a transparent, counselling-based process.

Thanking you,

Yours faithfully,

**President**

**General Secretary**

## நகல்:

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.432 / 2026, நாள்: 13.05.2026

பெறுநர்

1. முதலமைச்சர் தனி பிரிவு,
   தமிழ்நாடு அரசு
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை -600 009
2. தலைமைச் செயலாளர்,
   தமிழ்நாடு அரசு,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை -600 009
3. அரசுச் செயலாளர்,
   நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை -600 009

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - கண்காணிப்புப் பொறியாளர்களிலிருந்து தலைமைப் பொறியாளராக - பதவி உயர்வு வழங்குதல் - தொடர்பாக

நெடுஞ்சாலைத்துறையில் தலைமைப் பொறியாளர் பதவி உயர்வுக்கான இரண்டு பணியிடங்கள் காலியாகவுள்ளது. இந்த காலிப் பணியிடங்களில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தப்படுவோம் என தகுதியான தலைமைப் பொறியாளர் பதவிகளுக்கு பதவி உயர்வு ஆணையை எதிர்நோக்கி காத்திருக்கிறோம்.

இத்தகைய சூழலில், தலைமைப் பொறியாளர் நிலையில் உள்ள காலியிடங்களை நிரப்புவது, நெடுஞ்சாலைத் துறை பொதுமக்களுக்குச் சிறந்த சேவையாற்றப் பெரிதும் துணைபுரியும். எனவே, தலைமைப் பொறியாளர் பதவி உயர்வு அளிப்பதன் மூலம், தலைமைப் பொறியாளர் நிலையில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்குத் தேவையான உரிய

நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நாங்கள் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். ஓய்வு பெறும் நிலையில் உள்ள பொறியாளர்களுக்கு, பதவி உயர்வு இன்றி மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ள மூத்த பொறியாளர்களைப் பதவி உயர்த்தி கௌரவிக்கும் இம்முயற்சி, அவர்களுக்குப் பெரிதும் ஊக்கமளிப்பதாக அமையும்.

இதன் காரணமாக பதவி உயர்வு வழங்க தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

பொதுச் செயலாளர்

---

# வாழ்த்துகிறோம்!

**1. பொறிஞர் எம்.சந்திரசேகரன்,**
துணை கண்காணிப்புப் பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை, சேலம்
**2. பொறிஞர் எ.மாதேஸ்வரன்,**
கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அரந்தாங்கி
**3. பொறிஞர் பி. பிச்சை,**
உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவாடானை

ஆகியோர் 31.03.2026 அன்று அரசுப் பணியினை நிறைவுச் செய்தனர்.
அவர்கள் நலன்கள் பலப் பெற்று பல்லாண்டு வாழ்க எனச் சங்கம் வாழ்த்துகிறது.

தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் நிருவாகிகளின் கூட்டம் 15.03.2026 அன்று சென்னையில் நடைபெற்றது.




தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் **தலைவர் பொறிஞர் ப.வீரமணி** அவர்கள் உரையாற்றினார்




தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கத்தின் **பொருளாளர் பொறிஞர் சொ.தியாகராஜா** அவர்கள் உரையாற்றினார்



தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் நிருவாகிகளின் கூட்டம் 15.03.2026 அன்று சென்னையில் நடைபெற்றது. பல்வேறு துறையைச் சார்ந்த பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு பொறியாளர் கூட்டமைப்பின் நிருவாகிகளின் கூட்டம் 15.03.2026
அன்று சென்னையில் நடைபெற்றது.




**பொறிஞர் பி.பிச்சை, உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவாடணை** அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 30.04.2026 அன்று இராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் சங்க நிருவாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினர்




**பொறிஞர் பி.பிச்சை, உதவிக் கோட்டப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, திருவாடணை** அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 30.04.2026 அன்று இராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் சிறப்பாக நடைபெற்றது. விழாவில் 2009 பணியில் சேர்ந்த பொறியாளர்களின் சார்பாக நினைவு பரிசு வழங்கினர்.

**நகல்:**

# தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்

'நெடுஞ்சாலைப் பொறியாளர் இல்லம்', 35வி, தாலுகா அலுவலக சாலை, சைதாப்பேட்டை, சென்னை - 600 015
தொலைபேசி எண் : 044 - 2230 0190 / 4312 3792
மின்னஞ்சல் : atnhe.chn@gmail.com / atnhe.chn15@gmail.com
வலைதளம் : www.tnhighwaysengineers.com

| தலைவர் | பொதுச் செயலாளர் | பொருளாளர் |
| --- | --- | --- |
| பொறிஞர் **சே.இராமநாதன்,** பி.இ., | பொறிஞர் **ப.வீரமணி,** எம்.இ., எம்.பி.ஏ., | பொறிஞர் **சொ.தியாகராஜா,** எம்.இ., |
| கைபேசி எண்: 88708 88918 | கைபேசி எண்: 97517 04393 | கைபேசி எண்: 98436 40475 |


கடித எண்.432/ 2026, நாள்: 13.05.2026

1. அரசுச் செயலாளர்,
   நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை,
   புனித ஜார்ஜ் கோட்டை,
   சென்னை -600 009

2. முதன்மை இயக்குநர்,
   நெடுஞ்சாலைத்துறை,
   சென்னை - 600 025

ஐயா,

பொருள் : நெடுஞ்சாலைத்துறை - தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் - பதவி உயர்வு வழங்குதல் - தொடர்பாக

நெடுஞ்சாலைத்துறையில் 2026-2027 ஆம் ஆண்டிற்காக, தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான பதவி உயர்வுக்கான பணியிடங்கள் காலியாகவுள்ளது. இந்த காலிப் பணியிடங்களில் பதவி உயர்வு வழங்கி பணியமர்த்தப்படுவோம் என தகுதியான தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் ஆகிய பதவிகளுக்கு பதவி உயர்வு ஆணையை எதிர்நோக்கி காத்திருக்கிறோம்.

இத்தகைய சூழலில், தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள காலியிடங்களை நிரப்புவது, நெடுஞ்சாலைத் துறை பொதுமக்களுக்குச் சிறந்த சேவையாற்றப் பெரிதும் துணைபுரியும். எனவே, தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்குப் பதவி உயர்வு அளிப்பதன் மூலம், தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர் நிலையில் உள்ள காலியிடங்களை நிரப்புவதற்குத் தேவையான உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமாறு நாங்கள் பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். ஓய்வு பெறும் நிலையில் உள்ள பொறியாளர்களுக்கு, பதவி உயர்வு இன்றி மனச்சோர்வுக்கு ஆளாகியுள்ள மூத்த பொறியாளர்களைப் பதவி உயர்த்தி கௌரவிக்கும் இம்முயற்சி, அவர்களுக்குப் பெரிதும் ஊக்கமளிப்பதாக அமையும்.

இதன் காரணமாக பதவி உயர்வு வழங்க தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

பொதுச் செயலாளர்

**வழக்கு நிதி வழங்குக!**

**சென்னை வரும் பொறியாளர்கள் நெடுஞ்சாலை பொறியாளர் இல்லத்தில் தங்குக!**

## நகல்:

தமிழ்நாடு அரசு
2026

கையெழுத்துத் தொடர்

**நிதி (படிகள்) துறை**

**அரசாணை (நிலை) எண்.97, நாள்: 14–05–2026.**

*(சித்திரை – 31, திருவள்ளுவர் ஆண்டு 2057)*

**சுருக்கம்**

**படிகள்** – அகவிலைப்படி – **01–01–2026** முதல் உயர்த்தப்பட்ட அகவிலைப்படி வீதம் – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

**பின்வருவனவற்றைப் படிக்கவும்:–**

அரசாணை (நிலை) எண்.247, நிதி (படிகள்) துறை, நாள்.13–11–2025.

–oOo–

**ஆணை:**

மேலே படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கீழே குறிப்பிட்டுள்ளபடி, மாநில அரசு அலுவலர்களுக்கு திருத்தப்பட்ட வீதத்தில் அகவிலைப்படி அனுமதித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது:–

| எந்நாளிலிருந்து வழங்கப்படுகிறது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01–07–2025 | அடிப்படை ஊதியத்தில் 58 சதவீதம் |

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாநில அரசுப் பணியாளர்களுக்கு 58 சதவீதத்திலிருந்து 60 சதவீதமாக அகவிலைப்படியை 01–01–2026 முதல் உயர்த்தி வழங்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில், அகவிலைப்படியினை 2 சதவீதம் கூடுதல் உயர்வளித்து கீழே குறிப்பிட்டுள்ளபடி, அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

| எந்நாளிலிருந்து வழங்கத்தக்கது | திருத்தியமைக்கப்பட்ட அகவிலைப்படி வீதம் [மாதம் ஒன்றுக்கு] |
|---|---|
| [1] | [2] |
| 01–01–2026 | அடிப்படை ஊதியத்தில் 60 சதவீதம் |

3. ஜனவரி 2026 முதல் ஏப்ரல் 2026 வரையிலான அகவிலைப்படி நிலுவைத் தொகையினை தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லாப் பரிவர்த்தனை முறை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கப்பட வேண்டும். திருத்தப்பட்ட அகவிலைப்படியினைக் கணக்கிடுகையில் ஒரு ரூபாய்க்குக் குறைவாக வரக்கூடிய தொகை, அது 50 காசும் அதற்கு மேலும் இருக்குமாயின் அது அடுத்த ஒரு ரூபாயாகக் கணக்கிடப்பட வேண்டும். அதுவே, 50 காசுக்குக் குறைவாக இருந்தால் அது விட்டுவிடப்பட வேண்டும்.

**த.பி.பா.**

4. மேலே அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி தற்போது அகவிலைப்படி பெறும் முழு நேரப் பணியாளர்களுக்கும், சில்லறைச் செலவு நிதியிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட மாதாந்திர ஊதியம் பெறும் முழு நேர அலுவலர்களுக்கும் அனுமதிக்கத்தக்கதாகும். இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, பகுதி நேரப் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

5. இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட திருத்தப்பட்ட அகவிலைப்படி, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பிற அலுவலர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்களுக்கும், பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக்குழு சம்பள வீதங்களின் கீழ்வரும் அலுவலர்களுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிற்சிப் பள்ளிகள், சிறப்பு பட்டயப் படிப்பு நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் / உடற்பயிற்சி இயக்குநர்கள் / நூலகர்கள் ஆகியோருக்கும், ஊதிய அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு காலமுறை ஊதிய நிலைகளில் ஊதியம் பெறும் வருவாய்த் துறையிலுள்ள கிராம உதவியாளர்களுக்கும், சத்துணவு திட்ட அமைப்பாளர்கள், குழந்தைகள் நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் பணிபுரியும் ஊராட்சிச் செயலாளர்கள் / எழுத்தர்கள் மற்றும் ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தும்.

6. இச்செலவு, சம்பந்தப்பட்ட கணக்குத் தலைப்பின் பெருந்தலைப்பு, துணைப் பெருந்தலைப்பு, சிறு தலைப்பின் கீழ்வரும் "303. அகவிலைப்படி" என்ற நுணுக்கத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

7. மேலே பத்தி 3 இல் ஒப்பளிக்கப்பட்ட திருத்திய அகவிலைப்படி நிலுவைப்பட்டியல் சமர்பிப்பது தொடர்பாக சம்பளம் பெற்று வழங்கும் அலுவலர்களுக்கு தக்க அறிவுரை வழங்கிட இயக்குநர் (மு.கூ.பொ), கருவூலக் கணக்குத் துறை, சென்னை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இதற்கான பட்டியல்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் திருத்தப்பட்ட அகவிலைப்படியை வழங்குமாறு கருவூல அலுவலர்கள் / சம்பளக் கணக்கு அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மு.அ.சித்திக்**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்**

அனைத்துத் துறை அரசுக் கூடுதல் தலைமைச் செயலாளர்/ முதன்மைச் செயலாளர்/ செயலாளர், சென்னை– 9

முதன்மைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.

காப்பாளர், ஆளுநர் மாளிகை, சென்னை–22.



# HIGH PERFORMANCE CONCRETE (HPC)

**By. Dr.C.Balaji venkateswaran, ME., Ph.D.,**
Assistant Divisional Engineer,
CKICP, Thiruvarur

**Introduction:-**

High performance concrete (HPC) is a concrete mix intended for higher strength requirements and durability. The constituents of HPC are similar to the conventional concrete, except for admixtures, but the proportions of the constituents are engineered to produce the more durable and stronger concrete.

**Strength Requirements:-**

According to IS 456, the code of plain and reinforced concrete , concrete that meet the compressive strength requirements of more than 60 Mpa (Cl.6.2, Table2 of IS 456 2000 and Cl.6 IS 10262 2019) are classified as HPC.

**Need for a HPC:-**

High performance concrete is required for the following type of structures

1. High rise buildings which require thinner column sand optimized floor requirements.

2. Long span bridge structures such as cable stayed bridges, suspension bridges, precast bridges etc.,. In bridges, the reduction in deck size and weight effectively increases the allowable unsupported span. For a continuous bridge, the number of piers can be reduced. In many infrastructure projects, high-performance concrete is chosen for its durability against various types of chemical (e.g., sulfate or chloride) and physical attack (e.g., abrasion).

3. Offshore and marine structures exposed to aggressive environments.

4. Long span industrial structures.

**Mix constituents:–**

Cement with low tri calcium aluminate i.e.C3A (sulphate resistant cement), as high C3A is incompatible with the superplasticizers, other

constituents are fine aggregate, coarse aggregate, water, Mineral admixtures (MA) and chemical admixtures (Ch.A). The Mineral admixtures are added to make the mix cementitious and to increase the pozzolanic content of the mix so as to increase the mix density and its strength and superplasticizers are added to increase the workability in the low w/c ratio environment.

The size of aggregates plays a significant role in determining the compressive strength of concrete. For instance, using maximum aggregate sizes ranging from 20 to 28 mm can yield concrete compressive strengths of approximately 70 MPa. If the goal is to achieve compressive strengths of 100 MPa, aggregates should range from 10 to 20 mm. For higher strengths exceeding 125 MPa, a maximum aggregate size of 10 to 14 mm is most effective. The careful selection of aggregate size not only influences strength but also affects workability and overall performance.

Well-graded aggregates are essential for reducing porosity and increasing the density of concrete, thereby enhancing its strength and durability. Fine aggregates should ideally have a fineness modulus around 3.0. This specification helps achieve optimal workability and reduces the amount of paste needed, which is often the weak link in concrete structures.

**Mix requirements :-**

The HPC mix is designed with the following ranges of the constituents (Section 3 Cl.10262 - 2019)

1. Cement content – 450 – 550kg / cum
2. Water cement ratio 0.20 - 0.35
3. Mineral admixture :- Silica fumes /fly ash/GGBFS/Fly Ash-5 to 30% by wt. of cement
4. Chemical admixtures:- Superplasticizers – 5 to 151 / cum

**Density of HP Cconcrete:-**

Density of HPC concrete ranges from 2400 – 2600 kg.cum.

**Curing Requirements:-**

Since HPC is having higher cement content and low permeability the concrete sets quickly therefore immediate curing is essential for HPC. But the

surface evaporation is less of a concern than in normal concrete and the internal desiccation of concrete is much higher in HPC as external curing water won't penetrate fully in to the concrete which lead to internal shrinkage (internal self - desiccation). This can be addressed by introducing reservoirs by using porous light weight aggregates and superabsorbent polymers.

**Economy of using HPC:-**

The HPC due to its higher cement content and the use of MA, Ch.Aetc., cost significantly higher than the conventional concrete i.e. approximately between Rs 5000-7000/=cum of concrete. Therefore its usage shall be restricted to the design requirement.

**Reference:-**


1. High performance concrete, American concrete institute, accessed online at https://www.concrete.org/topicsinconcrete/topicdetail/

2. High performance concrete: composition and Features accessed online at https://theconstructor.org/concrete/high-performance-concrete composition-features/

3. High performance concrete,www.sciencedirect.com accessed on line at https://www.sciencedirect.com/topics/materials-science/high-performance-concrete/

4. Understanding the Difference between Chemical and Mineral Admixtures in Concrete, Concrete captain.com accessed online at https://concretecaptain.com/difference-between-chemical-and-mineral admixtures/

5. Tips for Selection of Materials for High Strength Concrete (HSC), E.oli,2024, https://build-construct.com/building/high-strength-oncrete/

6. Indian standard of code of practice for plan and reinforced concrete IS 456 -2000

7. Indian standard code of practice for Concrete Mix Proportioning —Guidelines (Second Revision) IS 10262- 2019



## கம்போடியா (கம் ஓடியா) நாட்டின் காட்சி
### (பதிவு 4)

**பொறிஞர் ப.நரசிம்மன், எம்.இ.,**
**முன்னாள் துணைத்தலைவர்,**
**தமிழ்நாடு நெடுஞ்சாலைத்துறை பொறியாளர் சங்கம்**




கம்போடியா நாட்டில் காலடி வைத்தது முதல், கண்ணில் பார்க்கின்ற ஒவ்வொரு காட்சியும் ஒவ்வொன்று விதமான பரவசத்தை ஏற்படுத்தின. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக காட்சி அளித்தன.

தங்கும் விடுதியில் சற்று ஓய்வெடுத்த பிறகு, மாலை நேரம் கம்போடியாவின் சுற்றுச்சூழல் மற்றும் சுற்றுப்புற அமைப்பு எவ்வாறு அமையப்பெற்று இருக்கிறது என்பதை அறிய மனம் ஆவல் கொண்டது.

அதன் அடிப்படையில் அருகாமையில் இருந்த டீக்கடை மற்றும் கரும்பு ஜூஸ் கடைகளுக்குச் சென்று அங்கு பணிபுரிந்து கொண்டிருக்கும் பணியாளர்களுடன், புரியாத மொழிகளில் பேசி, தேவையானவை களை உண்டு மகிழ்ந்தோம்.




பேசும் மொழியால் புரிந்து கொண்டதை விட, சைகை மொழியும் மௌன மொழியும் பெரிதளவில் பயன்பட்டன. இந்த மொழிகளுக்கு எல்லை என்பது இல்லை. மேலும், இனப் பாகுபாடு இல்லை என்பதையும் புரிந்து கொண்டோம்.

எங்கு பார்த்தாலும் உழைப்பை மட்டுமே நம்புகின்ற மக்கள் கூட்டமாக



பார்க்க முடிந்தது. ஒருவரும் வேறு எந்த ஒருவரையும் ஏமாற்றி பிழைக்கும் எண்ணத்தை இவர்கள் கொண்டிருக்கவில்லை என்பதை அறிந்து கொள்ளும் விதமாக அவர்களின் செயல்பாடுகள் நமக்கு வியப்பை தந்தன.

மாலை நேரம் முடிந்து, இரவு நேரம் தொடங்க இருக்கும் சூழலில், பிரபல யூடுபர் கம்போடிய நகரத்தை நோக்கி புறப்பட தயாராக இருந்தார். அவரோடு நாமும் சேர்ந்து கொண்டோம். அந்த youtuber பத்து வருடத்திற்கு முன்பே இங்கு வந்து சென்றதாகவும், அந்த காலகட்டத்தில் பெருமளவில் வளர்ச்சி இல்லாமல், ஆங்காங்கே ஓரிரு கட்டிடங்கள் மட்டுமே இருந்த காட்சியை நம்மோடு பகிர்ந்து கொண்டார்.

இன்றைய சூழலில் வண்ண வண்ண விளக்குகள் தெருவை அலங்கரித்துக் கொண்டிருந்தன. எந்த பக்கம் பார்த்தாலும் சீர்பாடான செயல்பாடுகளை காண முடிந்தது. விதிகளை மீறி செயல்படும் மக்கள் நம் கண்களில் தென்படவில்லை. அது சாலை விதியாக இருந்தாலும் சரி, பொதுவான விதியாக இருந்தாலும் சரி, அதை அனைவரும் செவ்வனே கடைபிடித்து கடமையாற்றிக் கொண்டிருந்தார்கள்.

நாம் தங்கி இருந்த விடுதியில் இருந்து நகரத்தின் மையப் பகுதியில் இருந்த மார்க்கெட் பகுதியை அடைவதற்கு பல விதமான வாகனங்கள், வாடகை வாகனங்கள் காத்திருந்தன. கம்போடிய நாட்டின் கரன்சியை விட, அமெரிக்க டாலர் அனைவரிடமும் பரிவர்த்தனையில் இருந்தது. எதை எடுத்தாலும் ஒரு டாலர், இரண்டு டாலர் என்ற அளவில் நாம் செலவு செய்ய முடிந்தது.

கம்போடியா மண்ணில் கால் பதித்த முதல் நாள் கம்போடிய நகரத்தின் காட்சியைக் காண கண்கள் இரண்டும் போட்டி போட்டு வாகனத்தை முந்திக் கொண்டு சென்றன.

இருசக்கர வாகனத்தில் பின்புறம் 4 பேர் அமரும் வகையிலான இணைப்பை ஏற்படுத்தி, அதில் நம்மை உட்கார வைத்து ஓட்டிச் சென்றார்கள். நம்மூரில் ஆட்டோக்கள் பயணப்படுவதைப் போல, இந்த இருசக்கர வாகன இணைப்பு வாகனம் புதிய அனுபவத்தை தந்தது.

இரவு நேர கம்போடியா வீதிகள் தோறும் தென்பட்ட காட்சிகள் தாய்லாந்தில் இருக்கின்றோமா என்றதொரு தோற்றத்தை ஏற்படுத்தியது. நகரப் பகுதியில் அமைந்திருக்கும் மெயின் பஜார் என்ற பகுதியை அடைந்ததும் வாகனத்தில் இருந்து இறங்கி கூட்டத்தோடு கூட்டமாக நடக்கலாம்.

வீதியில் மக்கள் கூட்டம் நிரம்பி இருந்தார்கள். வீதியின் இருபக்கங்களிலும் உணவு கடைகள், மசாஜ் சென்டர்கள், அலங்கார பொருட்கள் விற்பனையகங்கள் என மாறி மாறி நம்மை வரவேற்றன. கடைகளை திரும்பி பார்க்கும் போதே நம்மை கடைக்குள் இழுத்துச் சென்று விடும் வகையில் இளம் நங்கையர்கள் வீதிகளில் நின்று கொண்டிருக்கிறார்கள்.

நம்மை பாதுகாத்துக் கொள்ளவும் நம் நோக்கம் அறிந்து, மன திடத்துடன் செல்ல வேண்டிய அவசியத்தை உணர்ந்து கொண்டோம். வீதிகள் முழுவதும் இசையால் நிரம்பி வழிந்தது. ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு விதமான மின்சார விளக்குகள் அலங்கரிக்கப்பட்டு பாதையில் செல்வோரை தன்வசம் இழுக்கும் விதமாக அமைந்திருந்தது.

வீதிகள் முழுவதும் நடந்தே சென்றோம் நடந்தே வந்தோம் என்ன நடக்கிறது என்பதை பார்த்துக் கொண்டே வந்தோம். இறுதியில் நாம் தங்கியிருந்த விடுதியில் பெயரைச் சொல்லி மீண்டும் வாடகை வாகனத்தில் ஏறி தங்குமிடம் நோக்கி புறப்பட்டோம்.



பொறிஞர் ட்டி.ஆர்.தங்கராஜி, உதவிப் பொறியாளர், நபார்டு மற்றும் கிராமச் சாலைகள், திருச்சி அவர்கள் 17.03.2026 அன்று திருச்சியில் இயற்கை எய்தினார். அவர்களின் குடும்பத்திற்கு திருச்சி மண்டலத்தின் சார்பாக **பொறிஞர் ஜெ.கண்ணன், கோட்டப் பொறியாளர், க(ம)ப, திருச்சி** அவர்கள் நிதியினை சங்க நிருவாகிகளிடம் வழங்கினார்.



**பொறிஞர் எ.மாதேஸ்வரன், கோட்டப் பொறியாளர்,**
**கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, அறந்தாங்கி**
அவர்களின் பணி நிறைவு பாராட்டு விழா 03.05.2026 அன்று
புதுக்கோட்டையில் சிறப்பாக நடைபெற்றது.
விழாவில் நமது சங்கத்தின் **பொதுச் செயலாளர் பொறிஞர் ப.வீரமணி,**
**பொருளாளர் பொறிஞர் சொ. தியாகராஜா மற்றும்**
**செயற்குழு உறுப்பினர் பொறிஞர் என். கோட்டை ராவுத்தர்**
ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்தினர்

RNI No. 49572/90

**Registration No. TN/CC (S) DN/597/23-25**
**Licensed to post without prepayment under WPP No.TN/PMG/(CCR)WPP146 / 23 – 25**
**Date of Publication: First Week of Every Month**
**Posted at PathrikaChennel, Egmore, Chennai - 600 008**
**Posted between 7th - 13th Everymonth** **Despatch Date : 25.05.2026**




புதிதாக பொறுப்பேற்றுள்ள **மாண்புமிகு பொதுப்பணிகள் (கட்டடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்), விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா** அவர்களை 18.05.2026 அன்று நேரில் சந்தித்து சங்க நிர்வாகிகள் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தனர்




**மாண்புமிகு பொதுப்பணிகள் (கட்டடம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள்), விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஆதவ் அர்ஜுனா** அவர்களை 18.05.2026 அன்று நேரில் சந்தித்து சங்க நிர்வாகிகள் நெடுஞ்சாலைத்துறை மறுசீரமைப்பை விரைவில் அமல்படுத்துமாறு கோரிக்கை கடிதம் அளித்தனர்

Published by: Er.A.Venkatachalam, M.E., Former President, ATNHE, on behalf of the Association of Tamilnadu Highways Engineers; 35V, Taluk Office Road, Saidapet, Chennai-600 015
Printed by: S.S.Graphics, 54/2, Mohammed Hussain Street, Royapettah, Chennai-600 014
Editor: Er.R.Deepak, M.E., Former General Secretary, ATNHE